# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 250/மா/2022**

**நாள்: 03.01.2023**

திரு.P. விஜயரகுநாதன்,
காஞ்சிபுரம் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம். – எதிர்மனுதாரர்

காஞ்சிபுரம், பிள்ளையார்பாளையம், சேலைராமசாமி தெரு, கதவு எண்.13ல் வசிக்கும் திரு. P. விஜயரகுநாதன் என்பவரின் 02.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.12.2022–ல் பெறப்பட்டு 250/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

காஞ்சிபுரம், பிள்ளையார்பாளையம், சேலைராமசாமி தெரு, கதவு எண்.13ல் வசிக்கும் திரு. P. விஜயரகுநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 02.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

காஞ்சிபுரம் மாநகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக பதிவு பெற்று மாநகராட்சி ஒப்பந்தப்பணிகளை நல்லமுறையில் நிறைவேற்றி வருகிறேன். கொரானா பெருந்தொற்று காலத்தில், காஞ்சிபுரம் மாநகராட்சி சுற்றுலாத் தலமாகவும் மாவட்ட தலைநகராகவும் உள்ளதால், கொரானா பெருந்தொற்று முன்தடுப்பு நடவடிக்கைகள், காஞ்சிபுரம் மாநகராட்சி நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டது. கொரானா பெருந்தொற்று பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு தடுப்பு அமைத்தல் மற்றும் அதிகப்படியான கொரானா பெருந்தொற்று ஏற்பட்ட பகுதிகளில் மக்கள் நடமாட்டத்தை தடுக்கும் பொருட்டு சாலைத்தடுப்பு அமைக்கும் பணிகள் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை பணி உத்தரவுகளின் பேரில் உடனுக்குடன் செய்து முடித்துக்கொடுத்தேன். கொரானா பெருந்தொற்று காலத்தில் எவ்வித சுணக்கமும் இன்றி என்னையே பணயம் வைத்து நோய் முன்தடுப்பு நடவடிக்கைக்கு மாநகராட்சிக்கு மேற்குறிப்பிட்ட பணிகள் செய்து ஒத்துழைப்பு வழங்கினேன். ஏறக்குறைய இரண்டரை ஆண்டுகள் கடந்த நிலையில் பல்வேறு உயர் அதிகாரிகள் (ஆணையர், பொறியாளர், உதவிப் பொறியாளர்) பணியிட மாற்றம் பெற்று சென்றதால் மேற்குறிப்பிட்ட பணிகள் செய்த வகையில் எனக்கு சேர வேண்டிய தொகை இதுநாள் வரை வழங்கப்படவில்லை. நிலுவையாக உள்ளது. பலமுறை ஆணையரை நேரில் சந்தித்து எனக்கு சேரவேண்டிய கீழே பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகையினை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தேன். மாநகராட்சியில் கொரானா தொற்று மற்றும் புதிய வரி விதிப்பு காரணமாக மாநகராட்சியில் நிதி

பற்றாக்குறையாக உள்ளது என்றும் அலுவலர்களுக்கு/பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கக்கூட மாநகராட்சி கணக்கில் நிதி இருப்பு இல்லையெனவும் தட்டிக்கழித்து வந்தார். பின்னர் எனது கஷ்டநிலைமையை அவரிடம் தெரிவித்து முறையிட்ட பின்பு, ஆணையர் அதற்காக ஒரு கமிட்டி ஏற்பாடு செய்துள்ளேன் என்றும், கமிட்டியின் அறிக்கை வந்தபிறகு பட்டியல்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன் என்றும் உறுதி அளித்தார். ஆனால் இந்நாள் வரை எனக்கு சேர வேண்டிய பட்டியலில் குறிப்பிட்ட தொகையினை வழங்காமல் இழுத்தடிக்கிறார். நான் மாநகராட்சிக்கு கொரானா பெருந்தொற்றுக்கு முன்தடுப்பு பணிக்காக எனக்கு அளித்த பணி உத்தரவின் பேரில் உடனடியாக பணி மேற்கொள்வதற்காக கடன் பெற்று பணிகளை உடனுக்குடன் செய்து முடித்தேன். எனக்கு கடன் கொடுத்தவர்கள் தங்களிடம் பெற்ற கடன் தொகையை வழங்குமாறு எனக்கு தொல்லை கொடுத்து வருகிறார்கள். இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக எனக்கு தொகை வழங்கப்படாததால் நான் கடன்காரனாகி தற்போது இதன் காரணமாக பெரும் மனஉளைச்சலுக்கு உள்ளாகி உள்ளேன். தற்போது காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை பணி உத்தரவின் பேரில் அளவு சுவடிகளில் இளநிலைப் பொறியாளர்களால் பணியினை அளவீடு செய்து பதிவு செய்யப்பட்டுள்ளதை மாநகராட்சி பொறியாளரால் மேல் அளவு ஆய்வு செய்யப்பட்டு அவை அளவுச்சுவடியில் பதிவு செய்யப்பட்டு அதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டு ஆணையரின் மேலான பார்வைக்கு பட்டியல் தொகை வழங்க உரிய குறிப்பு கோப்பில் பதிவு செய்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஆணையர் அவருடைய பணிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு மட்டுமே அவரால் பட்டியல் தொகை வழங்கப்படும் எனவும் அவரது பணி காலத்திற்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு தொகை வழங்குவது தற்போது முடியாது எனவும் திட்டவட்டமாக தெரிவித்து வருகிறார். அதன்பேரில் எனது கஷ்டத்தையும், மனஉளைச்சலை ஆணையரிடம் தெரிவித்து கெஞ்சியதற்கு நேரில் ஆணையர் அவர்கள் அதற்காக ஒரு குழு ஏற்படுத்தி அக்குழுவின் பரிந்துரை பேரில் பட்டியல் தொகை வழங்குவதாக உறுதியளித்தார்.

குழுவில் தொழில்நுட்பம் சார்ந்த பணியாளர்களோடு எழுத்தர்(உதவியாளர்) நிலையில் உள்ள இரு நபர்களை உள்ளடக்கி சான்றளிக்க குழு ஏற்படுத்தி உத்தரவிடப்பட்டதின்பேரில் குழுவில் இடம் பெற்ற தொழில்நுட்பம் சார்ந்து (மூன்று இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் மாநகர பொறியாளர்) அலுவலர்களால் சான்றளிக்கப்பட்டுள்ளது. எழுத்தர் நிலையில் உள்ள இரண்டு அலுவலர்களில் ஒருவரால் சான்றில் ஒப்பம் இடப்பட்டுள்ளது. இதர நபர் (சி1 எழுத்தர்) அவர்களால் ஒப்பமிடப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது. 6 அலுவலர்களில் தொழில் நுட்பம் சார்ந்த 4 அலுவலர்களால் பணி குறித்து பட்டியல் தொகை வழங்குவதற்கு தடை ஏதும் இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பம் சாராத எழுத்தர் ஒருவரால் சான்றொப்பம் இடப்படவில்லை. அதனைக்காரணம் காட்டி மாநகராட்சி ஆணையர் எனக்கு அளிக்கப்பட வேண்டிய பட்டியல் தொகையினை வழங்காமல் காலம் தாழ்த்துகிறார். எனது குடும்பம் நான் செய்கின்ற ஒப்பந்தப் பணிகள் மூலம் பெறுகின்ற வருமானத்தை சார்ந்தே உள்ளது.

மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள, தனிநபர்களிடம் என்னால் பெறப்பட்ட கடன், வட்டியுடன் சேர்த்து நீண்டகாலமாக எனக்கு சேரவேண்டிய தொகையை விட கூடுதலாகவே உள்ளது. இதனால் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளேன். எனவே மாண்புமிகு நீதியரசர் அவர்கள் விசாரித்து கீழே பட்டியலிடப்பட்டுள்ள என்னால் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு மாநகராட்சியால் வழங்கப்படவேண்டிய பட்டியல் தொகையினை வழங்க உரிய உத்தரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொரானா நோய் தொற்று தடுப்பு பணிகள் வார்டு 1 முதல் 51 வரை நோய்
தொற்று பாதிக்கப்பட்டவர்களின் குடியிருப்புகளுக்கு தடுப்புகள் அமைத்தல் ரூ.948754/

கொரானா நோய் தொற்று காலத்தில் தற்காலிக தினசரி சந்தைக்கு
தண்ணீர் வசதி செய்தல் ரூ.288992/-

| | |
|---|---|
| கொரானா நோய் தொற்று தடுப்பு பணிகள் வார்டு 1 முதல் 51 வரை நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்களின் குடியிருப்புகளுக்கு தடுப்புகள் அமைத்தல் | ரூ.979341/– |
| கொரானா நோய் தொற்று காலத்தில் தற்காலிக தினசரி சந்தையில் பயன்படுத்தப்பட்ட கடைகளை பிரித்து நகராட்சி பொருட்கள் பாதுகாப்பிற்கு கொண்டு சேர்க்கும் பணி | ரூ.199454/– |
| கொரானா நோய் தொற்று காலத்தில் தற்காலிக தினசரி சந்தைக்கு வாகனம் நிறுத்துமிடம் மற்றும் நுழைவு வாயில் வசதி செய்தல் | ரூ.473196/– |
| கொரானா நோய் தொற்று காலத்தில் வையாவூர் தற்காலிக தினசரி சந்தையில் அமைக்கப்பட்ட காய்கறி கடைகளை பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்திற்கு மாற்றி அமைத்தல் பணி | ரூ.843817/– |
| கொரானா நோய் தொற்று காலத்தில் தற்காலிக தினசரி சந்தைக்கு கழிப்பிட வசதி ஏற்படுத்தும் பணி | ரூ.198871/– |
| மொத்தம் | ரூ.39,32,425/– |

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு மாநகராட்சி பொறியாளர்களால் முறையாக அளவீடு செய்யப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அப்பணிகள் மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. பணிகள் மேற்கொண்டதற்கான உண்மை தன்மை அறியக்கூடிய விதத்தில் புகைப்படங்கள் அனைத்தும் கோப்பில் இணைக்கப்பட்டுள்ள நிலையில் மாநகராட்சி ஆணையரால் அமைக்கப்பட்ட ஆய்வு குழுவின் பரிந்துரை பெற்ற பின்னரும் எனக்கு வழங்கப்பட வேண்டிய தொகையினை வழங்காமல் காலம்தாழ்த்தி வருவதால் நான் தங்களின் மேலான சமூகத்தை நாடி வந்துள்ளேன். எனது மன உளைச்சலில் இருந்து விடுபட எனக்கு உரிய நியாயம் கிடைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 7.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. திரு விஜயரகுநாதன் புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 7.12.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. அவர் தனது 20.12.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"கொரானா நோய் தொற்று காலத்தில் செய்யப்பட்ட பணிகளின் கோப்புகள் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்ட தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் பணிகள் மேற்கொண்டு காலங்கடந்துள்ள நிலையில் தற்போது பட்டியல் தொகை வழங்கக்கோரி வரப்பெற்ற பணிகளுக்கண்டான கோப்புகளை பணிக்குழு உறுப்பினர்கள் கூர்ந்தாய்வு செய்து அதில் அப்போதைய அலுவலர்கள் குறிப்புரைகள் அளவுப்புத்தகத்தின் அளவீடுகள் மற்றும் புகைப்படங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் பட்டியல் தொகை வழங்க பரிந்துரைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தெரிவிக்கப்பட்ட நிலையில் மேற்படி தெரிவிக்கப்பட்ட கோப்புகள் தொடர்பாக அறிக்கை அளித்திட கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்."

4. மனுதாரர் 21.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

“காஞ்சிபுரம் மாநகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரராக பதிவு பெற்று அம்மாநகராட்சியில் ஒப்பந்தபணிகளை மேற்கொண்டு வருகிறேன். 2020 கொரானா பெருந்தொற்று காலத்தில் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த சாலை தடுப்பு அமைக்கும் பணி உள்ளிட்ட ஏனையப் பணிகளை மேற்கொண்ட எனக்கு பணிகளை முடித்த பின்பும் அப்பணிகளுக்குண்டான தொகையை இன்னும் காஞ்சிபுரம் மாநகராட்சியால் எனக்கு தரப்படவில்லை. கொரானா காலத்திற்குப் பின்னர் என்னால் வேறு சில பணிகள் முடிக்கப்பட்டு, அதற்கான தொகை எனக்கு வழங்கப்பட்டது. ஆனால், மேற்கண்ட கொரானா காலத்தில் பணிகளை முடித்தமைக்காக சுமார் 39 லட்சம் ரூபாய் நிலுவைத்தொகை காஞ்சிபுரம் மாநகராட்சியிலிருந்து எனக்கு வர வேண்டும். இது குறித்து தற்போதைய மாநகராட்சி ஆணையரிடம் கோரியபோது, நிதி பற்றாக்குறையின் காரணமாக தொகை வழங்க இயலவில்லை எனவும், மாநகராட்சியின் நிதிநிலை சீரடைந்தவுடன் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இதுகுறித்து நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு (அப்போதைய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்) நேரில் சென்று மனு அளித்த பின்னர், இந்நேர்வு தொடர்பாக குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கை பெற்ற பின்னர் எனக்கு மேற்கண்ட நிலுவைத்தொகை வழங்கப்படும் என மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டது. இதுவரை எனக்கு மேற்கண்ட தொகை கிடைக்கப்பெறவில்லை. எனவே கொரானா பெருந்தொற்று காலத்தில் மேற்கண்ட பணிகளை யாரும் மேற்கொள்ள இயலாத நிலையில் அவசரம் மற்றும் அத்தியாவசியமான பணிகளை மேற்கொண்ட எனக்கு மேற்கண்ட நிலுவைத்தொகயை மாநகராட்சியால் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

5. காஞ்சிபுரம் மாநகராட்சி இளநிலைப் பொறியாளர் 21.12.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி தனது பின்வரும் வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

மனுதாரர் திரு.விஜயரகுநாதன் என்பவருக்கு கொரானா பெருந்தொற்று காலமான 2020ல் மாநகராட்சியில் அத்தியாவசியப் பணிகளை மேற்கொண்ட வகையில் அவரது பட்டியலில் கண்டுள்ள தொகை மட்டும் மனுதாரருக்கு மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டும். இந்நேர்வு தொடர்பாக M.Book –லும் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநகராட்சியில் நிதி பற்றாக்குறையால் அவருக்கு மீதத்தொகையை இன்னும் வழங்கப்படவில்லை. மேற்கண்ட பணிகளைத் தவிர அதற்குப் பின்னர் 2021 மற்றும் 2022ல் மனுதாரரால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்தத்தொகை அன்னாருக்கு வழங்கப்பட்டு விட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 2020ல் கொரானா காலத்தில் மனுதாரரால் செய்த முடிக்கப்பட்ட பணிகள் குறித்து கடந்த அக்டோபர் மாதம் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் அறிக்கையினைப்பெற்று, மனுதாரருக்கு சேரவேண்டிய நிலுவைத்தொகை வழங்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் காஞ்சிபுரம்மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, இளநிலைப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் 2020 கொரானா பெருந்தொற்று காலத்தில் நோய் தடுப்பு நடவடிக்கையாக சாலை தடுப்புஅமைக்கும் பணி, வீடுகளுக்கு தடுப்பு அமைக்கும் பணி, உள்ளிட்ட ஏனையப் பணிகளை முடித்த பின்பும் அப்பணிகளுக்குண்டான தொகை இன்னும் காஞ்சிபுரம் மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. கொரானா காலத்திற்குப்பின்னர் வேறு சில திட்டப்

பணிகள் முடிக்கப்பட்டு, அதற்கான தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கொரானா காலத்தில் பணிகளை முடித்தமைக்காக சுமார் 39 லட்சம் ரூபாய் நிலுவைத்தொகை காஞ்சிபுரம் மாநகராட்சி இன்னும் வழங்கவில்லை. இது குறித்து மனுதாரர் தற்போதைய மாநகராட்சி ஆணையரிடம் கோரியபோது, நிதி பற்றாக்குறையின் காரணமாக தொகை வழங்க இயலவில்லை எனவும், மாநகராட்சியின் நிதிநிலை சீரடைந்தவுடன் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இதுகுறித்து நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு (அப்போதைய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்) நேரில் சென்று மனுதாரர் மனு அளித்த பின்னர், இந்நேர்வு தொடர்பாக குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கை பெற்ற பின்னர் மேற்கண்ட நிலுவைத்தொகை வழங்கப்படும் என மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு P.விஜயரகுநாதன் கொரானா பெருந்தொற்று காலத்தில் மேற்கண்ட பணிகளை யாரும் மேற்கொள்ளாத நிலையில், உயிர்காக்கும் கொரானா தடுப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளார். அவரால் மேற்கொள்ளப்பட்ட கொரானா தடுப்பு பணிகள் அப்போதைய நகராட்சி அலுவலர்களால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு "Measurement Book" லும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் கொரானா பெருந்தொற்று காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான தொகையை வழங்கிட மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. நகராட்சி நிர்வாக இயக்குநர் மனுதாரர் மனு அளித்த பிறகு, குழு ஒன்றை ஏற்படுத்தி, அதன் அறிக்கையின் அடிப்படையில் நிலுவை தொகை வழங்கப்படும் என மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு குழு அமைத்து 2 மாதங்கள் ஆகியும் மனுதாரருக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகையினை வழங்கிட இன்னும் கால அவகாசம் கோருவது என்பது கண்டனத்துக்குரிய செயல் ஆகும்.

மனுதாரர், அறிக்கை அளிக்க அமைக்கப்பட்ட குழுவில் இடம்பெற்றுள்ள சி1 எழுத்தர் சான்றொப்பம் இடாததை காரணம் காட்டி மாநகராட்சி ஆணையர் தனக்கு அளிக்க வேண்டிய பட்டியல் தொகையினை வழங்க மறுப்பதாக குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்ததாரர், பணியினை ஒப்பந்தப்படி முடித்து இருக்கும்பட்சத்தில், எக்காரணம் இல்லாமல் பட்டியல் தொகை வழங்காமல் இருப்பது கண்டனத்துக்குரியது. குழுவில் மற்ற உறுப்பினர்கள் சான்றொப்பம் அளித்த நிலையில், சி1 எழுத்தர் எவ்வித எழுத்துபூர்வ விளக்கமும் தெரிவிக்காமல் சான்றொப்பம் அளிக்காமல் இருப்பது மற்றும் காலதாமதம் ஏற்படுத்துவது ஏதோ உள்நோக்கத்துடன் செயல்படுவதாகவே இம்முறைமன்றம் கருதுகிறது. இது குறித்து மாநகராட்சி ஆணையரால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இந்நிகழ்வில் அவ்வாறு நடைபெறவில்லை என தெரிய வருகிறது. குழுவின் மற்ற உறுப்பினர்கள் சான்றொப்பம் அளித்த நிலையில் சி1 எழுத்தர் சான்றொப்பம் அளிக்காமல் இருப்பது உள்நோக்கம் மற்றும் திட்டமிட்ட செயலாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

வேண்டுமென்றே காலதாமதத்தை ஏற்படுத்தி உள்ளதுடன் நிலுவைத்தொகையினை விதிகளுக்குட்பட்டு அளிக்காமல் இருக்கும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர் மீது நடைமுறையில் உள்ள உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், குழுவின் அறிக்கையினை உடனடியாக பெற்று மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகையினை தாமதமின்றி வழங்கிட காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியும் ஆணையிடுகிறது.

The delay in settlement of the dues to the petitioner does not stand to reason and legality. It is shocking that the Corporation, which allotted certain items of work to be carried out during the Corona out break period in 2020 and when the tenderer petitioner had completed the assigned activities, is reluctant to settle the dues payable to the petitioner for the last nearly 3 years citing flimsy, frivolous and flippant reasons as could be read from the report of the Commissioners and deposition of the respondent Junior Engineer of the

Corporation. The bills that were claimed after this period have been settled by the Corporation. The Commissioners past and present dodge and evade their duties by quoting reasons that a member of the Committee has not signed the report and hence payment could not be made. This exposes their ulterior motives, malfide intentions and negative perversion in the whole issue. The DMA is directed to pull up the Commissioners responsible for this unconscionable delay and denial with no justification. Disciplinary action should be initiated against all the delinquents involved in this wilful, prolonged and unethical delay in settling the dues. The DMA is also instructed to recover the interest payable to the petitioner for this protracted delay according to Government norms from the Commissioners, past and present, who have been the architects of this avoidable injustice. A copy of the orders is sent to the Additional Chief Secretary, MAWS Department for information.

2023-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு P.விஜயரகுநாதன்,
   13, சேலை இராமசாமி தெரு,
   பிள்ளையார்பாளையம்,
   காஞ்சிபுரம் – 631 502.
2. ஆணையர்,
   காஞ்சிபுரம் மாநகராட்சி,
   காஞ்சிபுரம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்.
   சென்னை – 600 028.
4. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
5. அரசு கூடுதல் தலைமைச் செயலர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
   தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 600 009.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக